

திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றியம், அயப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில், ரூ.6.99 கோடி மதிப்பீட்டில், நேற்று (28.7.2023) TNHB, பேரறிஞர் அண்ணா சாலை, மழைநீர் வடிகால் மற்றும் சாலை விரிவாக்கப் பணியை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், தலைமைப் பொறியாளர் எம்.முருகேசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நிறுத்தப்பட்ட M18N நங்கநல்லூர் கூடுவாஞ்சேரி, M1A நங்கநல்லூர் திருவான்மியூர், 154P பட்டூர் தி.நகர் ஆகிய வழித்தடங்களில் பேருந்துகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதி செயலாளர் பி.குணாளன், நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### ஜனநாயகம் காப்போம்! முதல்வர் மு.க.ஸ்டாலினின் சிம்மக்குரலை

# பிரதமர் நரேந்திர மோடியால் - தாங்கிக் கொள்ள முடியவில்லை!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்

சென்னை, ஜூலை 29-

ஜனநாயகம் காப்போம் என்று குறிப்பிட்டு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பி வரும் சிம்மக் குரலை பிரதமர் மோடியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ. ஆட்சியில் அனைத்து மாநிலங்களிலும் வெறுப்புணர்வு அதிகரித்துள்ளது. மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியை பா.ஜ.வினர் திட்டமிட்டு செய்துவருகின்றனர். இதனால் இந்திய நாட்டின் ஜனநாயக கட்டமைப்பு ஆட்டம் கண்டுள்ளது. மதரீதி யாக மக்களை பிரிவினைப் படுத்தி நாட்டையே துண்டாட பா.ஜ. திட்டமிட்டு காய் நகர்த்தி வருகிறது. இதற்கு உதாரணமாக மணிப்பூர் மாநிலம் பற்றி எரிவதை கண்கூடாக பார்த்து வருகிறோம். இதே நிலை அனைத்து மாநிலங்களிலும் பரவும். ஏன், தமிழ்நாட்டில் கூட பரவும். இதை விட்டுவிடக்கூடாது. அதற்கு முன்பு இந்தியாவை சிதைத்து விட்ட ஒன்றிய பா.ஜ. ஆட்



தினகரன்

ஜூலை 28, 2023 வெள்ளிக்கிழமை

ஜனநாயகம் காப்போம்

நாட்டில் பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பாஜ ஆட்சியில் அனைத்து மாநிலங்களிலும் வெறுப்புணர்வு அதிகரித்துள்ளது. மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியை பாஜவினர் திட்டமிட்டு செய்துவருகின்றனர். இதனால் இந்திய நாட்டின் ஜனநாயக கட்டமைப்பு ஆட்டம் கண்டுள்ளது. மதரீதியாக மக்களை பிரிவினைப் படுத்தி நாட்டையே துண்டாட பாஜ திட்டமிட்டு காய் நகர்த்தி வருகிறது. இதற்கு உதாரணமாக மணிப்பூர் மாநிலம் பற்றி எரிவதை கண்கூடாக பார்த்து வருகிறோம். இதே நிலை அனைத்து மாநிலங்களிலும் பரவும். ஏன், தமிழ்நாட்டில் கூட பரவும். இதை விட்டுவிடக்கூடாது. அதற்கு முன்பு இந்தியாவை சிதைத்துவிட்ட ஒன்றிய பாஜ ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

சிக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

மதவாத பா.ஜ. ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற முயற்சியில் 26 கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணியை உருவாக்கியுள்ளது. அடுத்த ஆண்டு மக்களவை தேர்தலில் இந்த கூட்டணி மகத்தான வெற்றியை பெற்று நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், ஜனநாயகம் ஆகியவற்றை மீட்டெடுக்க வேண்டும். இதற்காக தொலை நோக்கு பார்வை கொண்டுள்ள தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலை தி.மு.க. எதிர்கொள்ளும் வகையில் வாக்குச்சாவடி முகவர்களை நியமித்து அவர்களை சிறந்த முறையில் தயார் படுத்தி வருகிறார்.

நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றிவாகை சூட வேண்டும் என்பதால் தமிழக அரசின் நலத்திட்டங்களை வீடு வீடாக கொண்டு சேர்க்க வேண்டியது கடமையாகும். தமிழகத்தில் மக்கள் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மகத்தான ஆட்சி நடந்து வருகிறது. இந்த ஆட்சி மீது எந்த கொம்பனாலும் குறை சொல்ல முடியாது. இதனால் பழைய வெற்றுக் காகிதங்களை பெட்டியில் எடுத்துக் கொண்டு ஆளுநர் மாளிகைக்கு சிலர் அடிக்கடி சென்று வருகிறார்கள். இந்த பூச்சாண்டிகளை பார்த்து திராவிட மாடல் அரசு பயந்துவிடாது. அமலாக்கத்துறையை ஏவி தமிழ்நாட்டு ஆட்சியில் குழப்பத்தை ஏற்படுத்திவிட முடியாது.

தி.மு.க.வை பொறுத்தவரை மக்கள் தான் முதலாளிகள். மக்கள் என்ன நினைக்கிறார்களோ அதை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அப்படியே நிறைவேற்றி தருகிறார். இதனால் மக்களுடன் வலுவான கூட்டணியில் தி.மு.க. இருக்கிறது என்பதை சகித்துக்கொள்ள முடியாதவர்கள் முடிந்தவரை சேற்றை வாரி இறைத்து ஆட்சிக்கு கெட்டப்பெயரை ஏற்படுத்த அவதூறுகளை பரப்பி வருகிறார்கள். யார் ஆட்சியில் இருக்க கூடாது என்பதை முடிவெடுக்கும் தேர்தலாக நாடாளுமன்றத் தேர்தல் அமைய வேண்டும். இந்தியா முழுவதும் இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும். ஒன்றியத்தில் மீண்டும் பா.ஜ. ஆட்சிக்கு வந்தால் இந்தியாவை யாராலும் காப்பாற்ற முடியாது.

இந்தியாவில் ஜனநாயகமே இருக்காது. பா.ஜ. ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிம்மக்குரல் எடுத்து கர்ஜித்து வருவதால் பிரதமர் மோடியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எனவே, தமிழகத்தை அடிபணிய வைக்க சதிகளையும், சூழ்ச்சிகளையும் வகுத்து ஆளுநர் மூலம் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டை பா.ஜ. அரசு மற்றொரு மணிப்பூராக மாற்ற விடக்கூடாது. மக்களை வேறுபடுத்தி குளிர்காயும் பா.ஜ.வுக்கு உரிய பதிலடியை நாடாளுமன்றத் தேர்தலில் கொடுத்தாக வேண்டும். இதற்காக தி.மு.க. தயாராகிவிட்டது. தமிழக மக்களும் தயாராக இருக்கின்றனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை போர்படைக்கு தலைமையேற்றுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.க. தொண்டர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

# தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பு பொதுப்பிரிவு கலந்தாய்வு தொடங்கியது!

சென்னை, ஜூலை 29-

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளில் சேருவதற்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு தொடங்கியது. அண்ணா பல்கலைக்கழகத்தில் இணைப்பு பெற்ற பொறியியல் கல்லூரிகளுக்கு ஆன்லைன் வாயிலாக கலந்தாய்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு விண்ணப்பித்த 2 லட்சத்து 29 ஆயிரத்து 175 மாணவர்களுக்கு பல சுற்றுகளாக கலந்தாய்வு நடத்தப்படுகிறது. சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு கடந்த 22ம் தேதி தொடங்கியது. இந்நிலையில் பொது பிரிவினருக்கான கலந்தாய்வு நேற்று காலை 10 மணிக்கு தொடங்கியது.

பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு செப்டம்பர் 3ம் தேதி வரை நடைபெறுகிறது. பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு 3 கட்டங்களாக நடைபெறும். முதல் சுற்று பொது கலந்தாய்வு ஆகஸ்ட் 9ம் தேதி வரை நடத்தப்படுகிறது. 1,78,959 மாணவ, மாணவிகளுக்கான தரவரிசை பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. www.tneaonline.org என்ற இணையதளம் வாயிலாக மாணவர்கள் கலந்தாய்வில் பங்கேற்கலாம். மொத்தத்தில் தமிழ்நாடு முழுவதும் 430 பொறியியல் கல்லூரிகளில் ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 378 இடங்கள் நிரப்பப்பட வுள்ளன.

தரவரிசையில் 22 ஆயிரத்து 761 இடம் வரையுள்ள மாணவர்கள் பொறியியல் பொதுப்பிரிவு கலந்தாய்வில் பங்கேற்கிறார்கள். முதல் சுற்றில் மாணவர்கள் நேற்று (ஜூலை 28) காலை 10 மணி முதல் ஜூலை 30 மாலை 5 மணி வரை விருப்ப கல்லூரிகள் மற்றும் விருப்ப பாடப்பிரிவுகளை தேர்வு செய்யலாம். வரும் 31ம் தேதி காலை 10 மணிக்குள் மாணவர்களின் விருப்ப தேர்வு அடிப்படையில் அவர்களுக்கான தற்காலிக இடம் ஒதுக்கப்படும் என பொறியியல் படிப்புக்கான மாணவர் சேர்க்கை குழு தெரிவித்துள்ளது.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் ஆர்.கே. பேட்டை கிழக்கு ஒன்றியம் ராஜநகரம் கிராமக் கிளை அவைத் தலைவர் மறைந்த ஜெயராமன் அவர்களின் திருஉருவப்படத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் என். சந்திரன் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து அவரது குடும்பத்தினருக்கு பத்தாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சி.என்.சண்முகம், பெ.பழனி உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.


